இலங்கை பாராளுமன்றத்தில் அரச கணக்கு தொடர்பான செயற்குழுவால் சபையில் நிறைவேற்றப்பட்ட நிலையியற் கட்டளை 119(4) தொடர்பிலான அவதானிப்புகளும், மேற்கொண்ட நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

பாராளுமன்றத்தின் வெளியீட்டுத் தொடர் இலக்கம் 290

மாவட்ட செயலகம் - கம்பகா

| அ.க.செயற் குழுவால் சுட்டிக் காட்டப்பட்ட குறைப்பாடுகளும் வழிகாட்டல்களும் | கணக்கு கொடுக்கும் அலுவலரால் மேற்கொண்ட செயற்பாடுகள் | தற்கால முன்னெற்றம் |
|---|---|---|
| **1.**2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1. பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி, மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் செலவழிவு தொடர்பாக பரிசோதனை செய்திருக்கவில்லை | எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எரிபொருள் கிடைப்பது கட்டுப்படுத்தப்பட்டதால், எரிபொருள் செலவழிப்பு பரிசோதனைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. இரண்டு பதவிநிலை அலுவலர்களின் பங்களிப்புடன் கூடிய குழுவால் எரிபொருள் செலவழிவு பரிசோதனை மேற்கொள்ளுமாறு 2023.02.02 ஆம் திகதிய கடிதம் மூலம் அனைத்து பிரதேச செயலாளர்களையும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி எரிபொருள் செலவழிவு பரிசோதனை திட்டமிட்டபடி மேற்கொள்ளப்படுகிறது. | தற்போது, 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் 3.1. பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி, உரிய எரிபொருள் செலவழிவு பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது என்பதை அறியத் தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| **2.** அனைத்து வாகனங்களிலும் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் உடமையில் இல்லை என்பதுடன், அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்படவில்லை | CAO-1650 கார் வண்டி தவிர மற்ற அனைத்து வாகனங்களுக்கும் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் உள்ளன என்பதை அறியத் தருவதுடன், இந்த வாகனம் அரசாங்க நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு சொந்தமானது என்பதால், உரிமையை மாற்றம் செய்வதற்கான கடித ஆவணங்கள் அமைச்சிடம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.<br><br>மேலும் அரச இலச்சினை இல்லாத வாகனங்களில் அரச இலச்சினை பொறிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதால் உரிய பணிகளை துரிதமாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| **3.** மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அல்லது அதற்கு முந்தைய ஆண்டுகளில் இருந்து காணப்படும் செயலற்ற வங்கிக் கணக்குகள் சீராக்கப்படவில்லை | முந்தைய ஆண்டுகளில் இருந்து காணப்படும் செயலற்ற கணக்குகள் மூடப்பட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தற்போது செயலற்ற வங்கிக் கணக்குகள் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | தற்போது செயலற்ற வங்கிக் கணக்குகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் |

<table>
<tr>
<td>4. ஒராண்டிற்கும் மேலாக காணப்படும் கடன் நிலுவைகள் இருந்தன.</td>
<td>இந்தக் கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு தொடர்ச்சியாக பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெரும்பாலான கடன்கள் அந்தந்தக் கடன் பெற்றவர்களின் ஓய்வூதியப் பணிக்கொடையில் இருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
<table>
<tr><th>வகைப்படுத்தல்</th><th>2021.12.31 ஆம் திகதியில் நிலுவை</th><th>2024.03.31 திகதியில் அறவிடல்</th><th>மேலும் அறவிடுவதற் குள்ள மீதி</th></tr>
<tr><td>மரணமடைந்த அலுவலர்கள்</td><td>441,531.00</td><td>441,531.00</td><td>0</td></tr>
<tr><td>ஓய்வுபெற்ற அலுவலர்கள்</td><td>2,061,115.00</td><td>1,574,976.00</td><td>486,139.00</td></tr>
<tr><td>பணி தடை செய்யப்பட்ட அலுவலர்கள்</td><td>1,130,142.00</td><td>620,809.00</td><td>509,333.00</td></tr>
<tr><td>பதவி வெறித்தாக்கிய அலுவலர்கள்</td><td>313,498.00</td><td>220,668.00</td><td>92,830.00</td></tr>
<tr><td></td><td>3,946,286.00</td><td>2,857,984.00</td><td>1,088,302.00</td></tr>
</table>
2024.03.31 ஆம் திகதியில் பெரும்பாலான கடன் மீதி அறவிடப்பட்டுள்ளதுடன், ஏனைய மீதிகளை இயன்ற வரை 2024 ஆம் ஆண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.</td>
<td>மேலும் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகைகளில் பெரும்பாலானவை கடன் பெற்றவர்களின் ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கு முடியும் என்பதால், அதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் 2024 ஆம் ஆண்டில் ஆகக் கூடியதாக அறிவிட வேண்டியுள்ள நிலுவைத் தொகையை முடிந்தவரை அறவிடப்படும்.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| **5.** பொது வைப்புக் கணக்கில் உள்ள காலாவதியான வைப்புத்தொகை தொடர்பில், நி.ஒ. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பொது வைப்புக் கணக்கின் நிலுவையைத் தீர்ப்பதற்காக கடந்த சில ஆண்டுகளில் முறையான திட்டம் தயாரிக்கப்பட்டு, பெரும்பாலான நிலுவைகள் தீர்க்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இழப்பீட்டுத் தொகைகளைத் தீர்ப்பதற்கு ஒரு சிறப்புத் திட்டம் பயன்படுத்தப்படுகிறது. அதிவேக வீதிகளுக்காக கையகப்படுத்துதலின் கீழ் இழப்பீட்டுத் தொகை போதுமற்றதால், பெறப்படாத அதிக அளவிலான இழ்பீட்டுகள் இந்த இழப்பீட்டு தெகையில் காணப்படுகிறது. ஆகையால் குறித்த இணக்கப்பாடு கிடைக்கும் வரை, தொடர்புடைய இழப்பீட்டுத் தொகையை வைப்பு கணக்கில் வைக்க வேண்டும். மேலும், நிலத்தகராறு, இழப்பீடு பெறுபவர்கள் வெளிநாடு செல்லுதல் போன்ற காரணங்களால் இந்த இழப்பீடுகள் வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. இருப்பினும், 2024 ஆம் ஆண்டில் முடிந்தவரை இந்த வைப்பு நிலுவைகளை செலுத்துவதற்கு பணியாற்றப்டும். | 2022.12.31 ஆம் திகதியில், வைப்பு கணக்கு இலக்கம் 6000-0-0-1-0-61 ( பிணை வைப்புகள்), 6000-0-0-2-79 ( கேள்வி வைப்புகள்), 6000-0-0-13-49 (மூன்றாவது தப்பினருக்கான கொடுப்பனவுகள்) என்பவற்றின் கீழ் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட எந்தவொரு வைப்புத் தொகையும் இல்லை என்பதுடன், ஒப்பந்த பிடிபணம் (6000-0-0-16-31) இன் கீழ் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்பு மீதியான ரூபா .14,104,972.11 தொகையை சீராக்கம் செய்யுமாறு ஒப்பந்தக்காரர்களை அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டில் சீராக்குவதற்கு என்று எதிர்பார்க்கப்படுகிறது.<br>மேலும் நில வைப்புத் தொகையின் கீழ் (6000-0-0-17-0-10),மேலும் காணப்படும் |

| | | |
|---|---|---|
| | | 10 ஆண்டுகளுக்கும் மேலான வைப்பு மீதியான ரூபா.86,883,880 வைப்புத்தொகை நிலத் தகராறு காரணமாக எழுந்துள்ளது. குறித்த தொகையும் 2024 ஆம் ஆண்டில் தீர்க்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 6. திரட்டிய வருமானம் உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் மீள செலுத்தப்படவில்லை | அனுப்ப வேண்டிய அறிக்கைகளை முறைப்படி அனுப்புமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| **7.** நி.ஒ.விதி .119 பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மிகை கட்டணம் அறவிடப்படவில்லை | 2014 ஆம் ஆண்டில் மஹர பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற வருடாந்த பண மோசடி தொடர்பாக பொறுப்புகூற வேண்டிய அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நட்டத்தில் 63,366.96 ரூபா தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய பணத்தை அறவிடுவதற்காக உரிய அலுவலர்களையும் நிறுவனங்களையும் தொடர்ச்சியாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. | 2014 ஆம் ஆண்டு மஹர பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பண மோசடி தொடர்பில் நான்கு அதிகாரிகளிடமிருந்து 338,201.69 ரூபாவை சமனாக வசூலிப்பதுடன் தொடர்புடைய கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், வழமையான நினைவூட்டல் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன.இதன்படி, வசூலிக்கப்பட வேண்டிய இழப்பீட்டிலிருந்து ரூபா. 63,366.96 வசூலிக்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள |

| | | |
|---|---|---|
| | | தொகையை வசூலிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் மற்றும் அவர்கள் பணியாற்றும் நிறுவனங்களுக்கும் தொடர்ந்தும் அறிவித்து வருகின்றது. |

லலிந்த கமகெ
மாவட்ட செயலாளர்/அரச
கம்பகா நிருவாக மாவட்டம்

Lalinda Gamage
Government Agent / District Secretary
Gampaha Administrative District

எல்.ஏ.பீ.எல் குணசேன
பிரதான கணக்காளர்
கம்பகா நிருவாக மாவட்டம்

L.A.B.L. Gunasena
Chief Accountant
District Secretariat
Gampaha